சின்னத்தை முடக்க வந்தால், தேர்தல் கமிஷனில் இவர்களெல்லாம் பொதுக்குழு உறுப்பினர்கள் அல்ல என்று சொல்லி நிலை நிறுத்துவதற்கு ஒரு பெரிய மோசடியே தேர்தல் கமிஷனில் நடைபெற்றிருக்கிறது என்று நான்கூட அன்றைக்குச் சொன்னேன். இரண்டாம் சனிக்கிழமை அன்று தேர்தல் கமிஷன் திறக்கப்பட்டு இவைகளெல்லாம் வாங்கப்பட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களெல்லாம் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் அங்குபோய்ச் சேர்ந்தவர்களெல்லாம் இன்றைக்கு ஏமாந்து, ஏதோ பிற்காலத்தில் ஒரு வாழ்வு கிடைக்கும், ஏதோ இழந்த பதவிகளை எப்படியாவது பெற்றுவிடலாம் என்றுதான் அவர்கள் இருந்து கொண்டு இருக்கின்றார்கள் பாவம் அந்த அப்பாவிகள்.

(ஆ) விவசாயிகள் மின் கட்டண பாக்கிகளைச் செலுத்துவதற்குக் கால அவகாசம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் நான் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே தமிழகத்திலே விவசாயிகள் பல நேரங்களிலே மின்சார பம்ப் செட்டுகளுக்கு உண்டான மின் கட்டணத்தைக் கட்டாதவர்களுக்கு சென்ற அரசு அந்த மின் இணைப்பைத் துண்டித்து விட்டார்கள். அவர்கள் மீண்டும் மின் இணைப்பு பெறுவதற்கு இந்த அரசு, நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய தலைமையிலே அமைந்த இந்த அரசு, இரண்டு முறை 30—9—1990 வரையிலே பாக்கியிருக்கின்ற மின் கட்டணத்தைக்கட்டி மீண்டும் மின் இணைப்புப் பெறலாம் என்ற ஒரு சலுகையை அறிவித்தது. அந்த அடிப்படையில் சிலபேர் கட்டி பெற்றார்கள். இன்றைய தினம் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இலவச மின்சாரம் என்று விவசாயிகளுக்கு ஒரு பெரும் சலுகையை அறிவித்திருக்கின்ற இந்த நேரத்தில், பல ஏழை விவசாயிகள் ஏற்கெனவே மின்ணிணைப்பைத் துண்டித்துவிட்டிருந்தாலும் அவர்கள் மீண்டும் அந்தப் பாக்கிக் கட்டணத்தைக் கட்டி மின்னிணைப்புப் பெறுவதற்குண்டான நிலையினை இன்றையதினம் எண்ணுகிறார்கள். என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களை அணுகுகிறார்கள். அதை மனதிலே நிறுத்தி நமது மாண்புமிகு பொதுப்பணி — மின்துறை அமைச்சரவர்கள் வருகிற 30–9–1991 தேதி வரையிலே அதற்குக் கால அவகாசம் தந்து, அது வரையில் பாக்கிக் கட்டணத்தைக் கட்டுகின்ற விவசாயிகள் மின்னிணைப்புப் பெறலாம் என்ற சலுகையை அறிவிக்கவேண்டும். அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன், நன்றி, வணக்கம்.